SNS academy

an International CBSE Finger Print School
Coimbatore

# ஒழுக்கத்தின் உயர்வு

முன்னுரை:

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

என்பது தமிழ் மறை. விலங்குகளினின்றும் மனிதனைப் பிரித்துக் காட்டுவது 'ஒழுக்கம்' ஆகும். ‘ஒழுக்கமுள்ள மனிதர்' என்றுதான் சொல்வோமே தவிர 'ஒழுக்கமுள்ள விலங்குகள்' என்று சொல்வதில்லை. மனிதன் உயர்வடைய ஒழுக்கம் பேணுதலே உயர்வழியாகும்.

ஒழுக்கம் :

நன்னடத்தைகளின் தொகுப்பே ஒழுக்கம். நல்லனவற்றை நினைத்து, பேசி, செயல்படுவதே ஒழுக்கம். அடக்கம், அன்பு, இன்சொல், வாய்மை, நடுநிலைமை, நட்பு, பொறுமை முதலான நற்பண்புகள் யாவற்றையும் போற்றி வாழ்தலே நல்லொழுக்கம் ஆகும். ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்வதும் ஒழுக்கமே.

வள்ளுவர் காட்டும் ஒழுக்கம் :

திருவள்ளுவர் மனிதகுலம் வாழ்வாங்கு வாழ நன்னெறிகள் பலவற்றை வகுத்த சான்றோர் ஆவார். ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கவேண்டிய அன்புடைமை, அடக்கமுடைமை, அருளுடைமை, ஆள்வினையுடைமை எனப் பலவகை உடைமைகளை வகுத்துக் காட்டுகிறார். ஆனால், அவை அனைத்தையும்விட ஒழுக்கமே உயிர்நாடியானது என்பதை குறளின் வழி எடுத்துரைக்கிறார்.

ஒழுக்கத்தின் உயர்வு :

‘அறிவினும் ஒழுக்கமே உயர்ந்தது’ என்பது எமர்சன் கருத்து. நாம் செல்வத்தை இழந்தால் பெரிய இழப்பாகாது. உடல் நலத்தை இழந்தால் சிறியதாக இழந்தோர் ஆவோம். ஆனால் ஒழுக்கத்தை இழந்தால் அனைத்தையும் இழந்தவர் ஆவோம்.

புகழும் சிறப்பும் தருவது ஒழுக்கம். இம்மைக்கும் மறுமைக்கும் அஃது உறுதுணையாகும். நல்வினைக்கு ஏதுவாக அமையும். நீண்ட வாழ்நாளையும் மகிழ்ச்சியையும் செல்வத்தையும் அழகையும் தருவது நல்லொழுக்கமேயாகும்.

ஒழுக்கம் இன்மையால் ஏற்படும் இடர்கள்:

இயந்திர மயமாக இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, வன்முறை முதலியன மிகுதியாகிக் கொண்டே இருக்கின்றன. இவற்றிற்கு என்ன காரணம் என்று, சமுதாயச் சிந்தனையாளர்களையோ, அல்லது சமுதாயச் சீர்திருத்தவாதிகளையோ கேட்டால், அவர்கள் கூறும் ஒரே விடை 'தனிமனிதனின் ஒழுக்கக் குறைவே' என்பதாகும்.

ஒழுக்கத்தால் உயர்ந்தோர் :

தீமையானவற்றைப் பேசாதே, பார்க்காதே, கேளாதே என்று கூறியதோடு, வாழ்ந்தும் காட்டிய வாய்மையாளர் காந்தியடிகளும், முப்பால் வழங்கிய வான்புகழ் வள்ளுவரும் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்களே. தருமத்தின் காவலனாய் விளங்கிய தருமனும், ஒரு சொல், ஓர் இல் என வாழ்ந்த இராமனும் ஒழுக்க சீலர்களே. கற்பு நெறி போற்றித் தெய்வமாய் உயர்ந்த கண்ணகியும், அன்பின் பெருமையை உலகிற்கு உணர்த்திய புத்தரும், இயேசுவும், நபிகள் நாயகமும் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள்தாமே!

முடிவுரை :

இளமையும், செல்வமும், உலக வாழ்வும் நிலையற்றவை; ஒழுக்கம் ஒன்றுதான் இறுதிவரை நிலைத்திருப்பது. ஒழுக்கமே உயிர்; ஒழுக்கமே உயர்வு; ஒழுக்கமே உண்மைச் செல்வம்; ஒழுக்கமே கடவுள்.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலின் சிறந்தன்று ஒழுக்க முடைமை"
- முதுமொழிக் காஞ்சி.

an International CBSE Finger Print School
Coimbatore

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்ற குறள் மூலம் தெளிவுபடுத்துகிறார். கல்வியை இழந்தால் பெறலாம். ஒழுக்கத்தை இழந்தால் பெறமுடியாது. “ஒழுக்கத்தைக் காக்க; அவ்வொழுக்கமே உயர்குடிப் பிறப்பைத் தரும்; ஒழுக்கமே மேன்மை தரும்; ஒழுக்கமே நன்மைக்கு வித்தாகும்” என்பன ஒழுக்கத்திற்கு வள்ளுவர் தரும் விளக்கங்கள் ஆகும்.